

முதலமைச்சர் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன், திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி, மணம்பூண்டி ஒன்றியம், தண்டரை முதல் அடுக்கம் வரையிலான சாலை பணியினை கழக துணைப் பொதுச்செயலாளர், முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரகுமான், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் டி.என். முருகன், ஒன்றிய செயலாளர்கள் ஜி.ரவிச்சந்திரன், அ.சா.ஏ.பிரபு, ஒன்றிய குழு தலைவர் தனலட்சுமி உமேஷ்வரன், பேரூராட்சி தலைவர் ராயல் அன்பு, பொதுக்குழு உறுப்பினர் ராஜசேகர் , ஒன்றிய குழு துணை தலைவர் மணிவண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பொதுப்பணித்துறையின் சார்பில் சேலம் மாவட்டம், பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகை வளாகத்தில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பொதுப்பணித்துறை தர கட்டுப்பாட்டு ஆய்வகத்தினை நேற்று (12.03.2026) திறந்து வைத்தார். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன், மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

### சேலம் கோட்டம் – விழுப்புரம் கோட்டத்தைச் சேர்ந்த

# 554 போக்குவரத்துப் பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பயன்கள்!

## அமைச்சர்கள் இரா.இராஜேந்திரன் – எஸ்.எஸ்.சிவசங்கர் வழங்கினர்!

சேலம், மார்ச் 13 -

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மற்றும் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆகியோர் போக்குவரத்துக் கழக ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு ஓய்வு கால பணப்பலன்களை வழங்கினார்கள்.

சேலம், ராமகிருஷ்ணா சாலை, தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக சேலம் கோட்ட தலைமை அலுவலகத்தில் சுற்று லாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மற்றும் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆகியோர் போக்குவரத்துக் கழக ஓய்வு பெற்ற பணியா ளர்களுக்கு ஓய்வு கால பணப்பலன்களை வழங்கினார்கள்.

**இந்நிகழ்ச்சியில் சுற்று லாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேசியதாவது,**

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள பொது மக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங் களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன், மகளிர் விடியல் பயணத்திட்டம், தோழி விடுதிகள், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, முதலமைச்சரின் காலை உணவு திட்டம், மக்களைத் தேடி மருத்துவம், நலம் காக்கும் ஸ்டாலின் உள்ளிட்ட பல்வேறு திட்டங் களை இந்தியாவில் உள்ள பிற மாநிலங்கள் பின்பற்றும் வகையில் செயல்படுத்தி வருகிறார்கள்.

அந்த வகையில், போக்குவரத்துத்துறையில் முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் எளிதாக பயணம் செய்யும் வகையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் போக்குவரத்து வசதி ஏற்பாடு செய்து தந்துள்ளார்கள். மேலும், எந்த மாநிலங்களிலும் இல்லாத வகையில் மின்சார பேருந்துகள், compressed natural gas பொருத்தப்பட்ட பேருந்துகள், டீசல் பேருந்துகள் என போக்குவரத்துத்துறையில் பல நவீன மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளார்கள்.

அதன் தொடர்ச்சியாக முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் போக்குவரத்துத்துறையில் பணியுரியும் தொழிலாளர்கள் மகிழ்ச்சியுடனும் மற்றும் ஓய்வு பெற்ற பணியா ளர்கள் மனநிறைவுடனும் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் அவர்களுக்கான ஓய்வு கால பணப்பலன்கள் வழங்க மார்ச் 2026 வரை ரூ.2,446 கோடி நிதி ஒதுக்கிடு செய்யப்பட்டு இன்றைய தினம் வழங்கப்படுகிறது. அந்த வகையில் இன்றைய தினம் சேலம் கோட்டத்தை சார்ந்த 354 ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கும் மற்றும் விழுப்புரம் கோட்டத்தை சார்ந்த 200 ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கும் ஓய்வூதியப் பணப்பலன்கள் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேசினார்.

**இந்நிகழ்ச்சியில், போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது**

முதலமைச்சர் அவர்களின் சிறப்பான ஆட்சியால் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகமானது வலுவான கட்டமைப்பு மற்றும் வலுவான அடித்தளத்தை கொண்டு அனைத்து கிராமங்க ளுக்கும் பேருந்து வசதிகள், அதிக பேருந்துகள் மற்றும் 1,02,000 தொழிலாளர்களை கொண்ட சிறந்த நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. போக்குவரத்து தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம், முறையான சம்பளம், அகவிலைப்படி உயர்வு ஆகியவை வழங்கப்பட்டு வருகிறது. மேலும் சென்னை மாநகர போக்குவரத்து கழகம் இந்தியாவில் சிறந்த போக்குவரத்து நிறுவனம் என்ற விருது பெற்றுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் விடியல் பேருந்து பயணத்திற்காக ரூ.13,760 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக மகளிர் பேருந்து பயணம் செய்பவர்களின் எண்ணிக்கை 40 சதவீதத்திலிருந்து 70 சதவீதமாக உயர்ந்துள்ளது.

அதே போன்று முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் எளிதான பயணம் மேற்கொள்ளும் வகையில் புதிய பேருந்துகள் வாங்குவதிலும் தனிக்க வனம் செலுத்தி மொத்தமாக 13,000 புதிய பேருந்துகள் வாங்குவதற்கு உத்தரவிட்டு தற்போது வரை 8,200 பேருந்துகள் வாங்கப்பட்டுள்ளது. மேலும், மின்சார பேருந்துகள், சி.என்.ஜி பேருந்துகள் ஆகிய பேருந்துகளின் சேவைகளும் வழங்கப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் வெளிநாட்டில் பார்த்து ரசித்த பேருந்துகள் தமிழ்நாட்டில் தற்போது இயக்கப்பட்டு வருகிறது. இந்த பேருந்து சேவைகளை இயக்குகின்ற போக்குவரத்து தொழிலாளர்கள் மனமகிழ்வுடன் இருக்க வேண்டும் என்ற நோக்கில் அவர்களின் அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்றி வருகிறார்கள். கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்களின் கோரிக்கையான ஊதிய ஒப்பந்தம் சரிசெய்யப்பட்டு முதல் பேச்சுவார்த்தையில் 5 சதவிகிதம் ஊதிய உயர்வும், இரண்டாம் பேச்சுவார்தையில் 6 சதவிகிதம் ஊதிய உயர்வும் வழங்க ப்பட்டது. மேலும், தொழிலாளர்கள் நலன் காக்கும் முதல்வராக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திகழ்ந்து வருகிறார்கள்.

அந்த வகையில் தமிழ்நாடு முழுவதும் போக்குவரத்துத்துறையில் பணியுரியும் தொழிலாளர்கள் மகிழ்ச்சியுடனும் மற்றும் ஓய்வு பெற்ற பணியாளர்கள் மனநிறைவுடனும் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் அவர்களுக்கான ஓய்வு கால பணப்பலன்கள் வழங்க மார்ச் 2026 வரை ஓய்வு பெறுபவர்களுக்கு ரூ.2,446 கோடி நிதி ஒதுக்கிடு செய்யப்பட்டு, இன்றைய தினம் ஆகஸ்ட் 2024 முதல் ஜனவரி 2026 வரை ஓய்வு பெற்ற 6,257 பணியாளர்களுக்கு ரூ.2,201 கோடி தமிழ்நாடு முழுவதும் வழங்கப்படுகிறது. குறிப்பாக சேலம் கோட்டத்தை சார்ந்த 354 ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கும் மற்றும் விழுப்புரம் கோட்டத்தை சார்ந்த 200 ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கும் ஓய்வூதியப் பணப்பலன்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு முழுவதும் ஓய்வு காலத்தில் உயிர் நீத்த போக்குவரத்து தொழிலாளர்களின் வாரிசுகள் 1,500 நபர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக இதில் பெரும்பாலும் பெண்கள் பணிநியமன ஆணை பெற்று வருகிறார்கள் என்பது பெருமைக்குரியது. இவ்வாறு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசினார்.

இதனைத் தொடர்ந்து, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மற்றும் போக்குவரத்து மற்றும் மின்சா ரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் ஆகியோர் காணொலி காட்சி வாயிலாக சென்னை மாநகர போக்குவரத்து கழகம் சார்பில் கூடுதல் வசதிகளுடன் கூடிய 5 புதிய தாழ்த்தள மின்சார குளிர்சாதன பிரிமியம் பேருந்து சேவையினை தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், போக்குவரத்துத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ஷீன்சோங்கம் ஜடக் சிரு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தா தேவி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர்கள் வெ.குணசேகரன் (சேலம் கோட்டம்), க.குணசேகரன் (விழுப்புரம் கோட்டம்) உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம்,குளத்தூர் ஊராட்சி,பனையூரில் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.2 லட்சம் மதிப்பீட்டில் உடற்பயிற்சி உபகரணங்களை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ.வி. மார்க்கண்டேயன் வழங்கினார்.நிகழ்வில் விளாத்திகுளம் வட்டார வளர்ச்சி அலுவலர் முத்துக்குமார், ஒன்றிய செயலாளர்கள் சின்னமாரிமுத்து,இம்மானுவேல், ராமசுப்பு, அன்புராஜன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கடலூர் மேற்கு மாவட்டம்,பண்ருட்டி நகராட்சி, கடலூர் சாலை அருகே ரூ.15 லட்சம் மதிப்பில் அமையவுள்ள சிறுபாலம் பணி கட்டும் பணியை அடிக்கல் நாட்டியும், நகர்மன்ற தலைவர், நகர கழக செயலாளர் க.இராஜேந்திரன் துவக்கி வைத்தார். தணிகைசெல்வன், ஆனந்திசரவணன், கதிர்காமன், ராஜா, இராமலிங்கம், கௌரி அன்பு உள்ளிட்ட கழை நிர்வாகிகள் , நகரமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

### எரிவாயு தட்டுப்பாட்டிற்கு ஒன்றிய அரசே காரணம்!

# மோடி, அமித்ஷா எத்தனை முறை தமிழ்நாடு வந்தாலும் இங்கு ஒன்றும் நடக்காது!

## நெல்லையில் பேரவை தலைவர் மு.அப்பாவு பேட்டி!



*நெல்லை, மார்ச் 13 -*

எரிவாயு தட்டுப்பாட்டிற்கு ஒன்றிய அரசே காரணம்,30 நாட்களுக்கு கேஸ் இருப்பு உள்ளதாக கூறினார் கள்.உண்மையில் ஒன்றிய ஆட்சியில் உள்ளவர்களின் நண்பர்கள் இந்த தொழிலில் இருப்பதால், அவற்றை பதுக்கி வைத்து செயற்கையான தட்டுப்பாட்டை உருவாக்கி, விலையை ஏற்றி கொள்ளையடிக்கின்றனர். இது ஒன்றிய அரசால் உருவாக்கப்பட்ட தட்டுப்பாடு தான். என நெல்லையில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

நெல்லையில் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு செய்தியாளர் களிடம் பேட்டியின் போது கூறியதாவது:

பிரதமர், உள்துறை அமைச்சர் ஆகியோர் தேர்தல் வருவதால் அவர்கள் தமிழகத்திற்கு வரத்தான் செய்வார்கள்.அது அவர்களின் உரிமை. தேர்தல் நேரத்தில் மட்டும் புதிய ரயில்கள் மற்றும் மதுரை விமான நிலைய அறிவிப்புகள் வருவது குறித்த கேள்விக்கு,கடந்த 11 ஆண்டுகளில் எந்த ரயில்வே அமைச்சராவது ஒரு புதிய ரயிலை யாவது விட்டிருக்கி றார்களா? அல்லது ஒரு திட்டத்தையாவது தொடங்கியிருக்கிறார்களா, வெளியுறவுத்துறை அமைச்சர், ராணுவ அமைச்சர் யாரை யாவது துறை சார்ந்த நிகழ்வுகளுக்கு பிரதமர் அழைத்து சென்றிருப்பாரா , பிரதமர் அவரது பணியைத் தவிர மற்றபணிகளை சிறப்பாக செய்வார்.

ஒன்றிய அரசு நான்கு தினங்களுக்கு முன் என்ன சொன்னார்கள்.

"30 நாட்களுக்குத் தேவையான கேஸ்,பெட்ரோல்,டீசல் கையிருப்பில் இருப்பதாக கூறினர்.எந்த பிரச்சனையும் ஏற்படாது என்றனர். ஆனால் இன்று கேஸ் தட்டுபாடு ஏற்பட்டுள்ளது.ஒரு மாதத்திற்கான கேஸ் எங்கே? உண்மையில் ஒன்றிய ஆட்சியில் உள்ளவர்களின் நண்பர்கள் இந்த தொழிலில் இருப்பதால்,அவற்றை பதுக்கி வைத்து செயற்கையான தட்டுப்பாட்டை உருவாக்கி, விலையை ஏற்றி கொள்ளையடிக் கின்றனர்.இது ஒன்றிய அரசால் உருவாக்கப்பட்ட தட்டுப்பாடுதான். அவர்களைப் பற்றி தெரியாதா?ஒரே இரவில் ரூ.1000, ரூ.500 நோட்டுகளை செல்லாது என்றார்கள்.பிறகு ரூ.2000 நோட்டைக் கொண்டு வந்து அதையும் செல்லாது என்றார்கள். இதன் மூலம் கருப்புப் பணம் ஒழியவில்லை.மாறாக அவர்களின் நண்பர்கள் கருப்புப் பணத்தை வெள்ளையாக்கி,மூன்று,நான்கு மடங்கு கோடீஸ்வரர்கள் ஆகிவிட்டனர்.தி.மு.க.வை எதிர்த்து யார் களத்தில் உள்ளனர். எல்லோரும் நொருங்கி சில்லியாகி நிற்கின்றனர், மக்கள் தி.மு.க.வின் பக்கம் உள்ளனர்.

இந்த அரசு சாமானிய மக்களுக்கு அளித்துள்ள திட்டத்தால் மக்கள் தி.மு.க.விற்கு ஓட்டு போட தயாராக உள்ளனர்.53 சதவீதம் வாக்குகள் முதல்வர் அவர்கள் சுட்டிக்காட்டும் வேட்பாளருக்கு பதிவாகும்.மீண்டும் 2.0 ஆட்சி வரும்.

அமலாக்கத்துறை சமன் அனுப்பிய நிலையில் விஜய் தேசிய ஜனநாயக கூட்டணியுடன் இணைவதாக கூறப்படுகிறது என்ற கேள்விக்கு பாரதிய ஜனதா கட்சியின் கூட்டணி அமலாக்கத்துறை, சி.பி.ஐ, வருமான வரித்துறை,தற்போது புதிதாக தேர்தல் ஆணையம் இவர்களை தவிர அவர்களிடம் கூட்டணி யில் யார் உள்ளார்கள். இதனை வைத்துதான் ஒவ்வொரு மாநிலத்திலும் என்ன செய்ய வேண்டுமோ அதனை செய்கிறார்கள்.

தி.மு.க.200 தொகுதிக்கு மேல் வெல்லும் என்பது அதிகப்படியான நம்பிகையாக இல்லையா , நாடாளுமன்றத் தேர்தலில் 400 இடங்களை வெல்வோம் என்ற பா.ஜ.க.அந்த இலக்கை அடைய முடியவில்லை என்ற கேள்விக்கு

அவர்கள் அயோத்தியில் ராமர் கோவிலை கட்டுவார்கள், சாதி, மதக் கலவரங்களை உருவாக்குவதையும் தான் நம்பியுள்ளனர். இதைத் தாண்டி அவர்கள் மக்களுக்கு செய்த திட்டம் எதுவும் இல்லை.ஆனால் தமிழகத்தில் தி.மு.க.அரசு வழங்கும் திட்டத்தை பார்த்து மக்கள் வாக்காளிப்பார்கள்.

மோடி,அமித்ஷா ஆகியோர் எத்தனை முறை தமிழகம் வந்தாலும் அவர்களுக்கு இங்கு ஒன்றும் இல்லை என்பது தெரிந்து விட்டது. ஆகையால் அவர்கள் வருகையை தி.மு.க. எதிர்க்க வேண்டிய அவசியம் இல்லை.

இவ்வாறு பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சியில் பல்வேறு பகுதிகளில் ரூ. 78.05 இலட்சம் மதிப்பீட்டில் வளர்ச்சி திட்டப் பணிகளை மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் துவக்கி வைத்தார். நிகழ்வில் மாநகராட்சி ஆணையாளர் நிஷாந்த் கிருஷ்ணா, துணை மேயர் ம.மேரி பிரின்ஸி லதா, மண்டல தலைவர்கள் இ.ஜவஹர், பா.செல்வகுமார், பா.முத்துராமன், மாமன்ற உறுப்பினர்கள் சூ.அமல செல்வன், நெ.கலாராணி, ச.சோபி, ஜெ.நா.அனந்த லெட்சுமி, செல்வி, இ.ச.கௌசுகி, அ.அருள் சபிதா ரெக்ஸலின், தி.ரோஸிட்டா, சு.அனிலா, உதவி பொறியாளர்கள் ராஜசீலி, பிருந்தா, பிலிப், பழனியம்மாள், இளநிலை பொறியாளர்கள் ராஜா, தேவி, பகுதி செயலாளர்கள் மு.சேக்மீரான், த.ஜீவா, என்.பி.துரை மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



கழக தலைவர், முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, வளவனூர் பேரூராட்சி மன்ற அலுவலகத்தில், டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் மூலம், விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் வளவனூர் பேரூராட்சி சேர்ந்த இளைஞர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கினார். உடன் மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் இரா.கண்ணப்பன், வளவனூர் பேரூராட்சி மன்ற தலைவர் மீனாட்சி ஜீவா, வளவனூர் பேரூராட்சி செயலாளர் பா.ஜீவா, தலைமை பொதுக்குழு உறுப்பினர் TNJ.சம்பத், தலைமை கழக வழக்கறிஞர் சுவை சுரேஷ், செயல் அலுவலர் தனுஷ் கோடி, பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் B.அசோக், மன்ற உறுப்பினர்கள், சார்பு அணி நிர்வாகிகள், பேரூர் நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள், இளைஞர்கள் பலர் கலந்து கொண்டனர்.